**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.35/2016** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W.5.Dr.கங்காதேவி** |
| **Father's Name** | : ஜெயபால் |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of** 20.12.2021

**மு.வி:**

நான் தற்போது உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.05.2015 ஆம் தேதி பணியிலிருந்தபோது காலை 9.35 மணி அளவில் மாயாண்டிபட்டியை சேர்ந்த அமராவதி என்பவர் செக்கானூரணி காவல் நிலைய மெமோவுடன் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவரை நான் விசாரித்தபோது அவர் தன்னை அடையாளம் தெரிந்த 4 ஆண்கள் கம்பு மற்றும் கல் கொண்டு அன்று காலை 7 மணி அளவில் மாயாண்டிபட்டி சிவன்கோவில் தெருவில் வைத்து தாக்கியதாக சொன்னார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவருக்கு இடது கண்ணுக்கு இடது பக்கம் ஒரு சிறிய குழி அளவில் ஒரு காயம் காணப்பட்டது. வலது கை மற்றும் வலது முன்னங்கை வீக்கமாக காணப்பட்டது. இடது கண்ணில் வலி இருப்பதாக கூறினார். அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து 09.05.2015 ஆம் தேதி வரை சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். காயச்சான்று **அ.சா.ஆ.2.** சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

கு.வி:

காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயம் 1 மற்றும் 2 காயம்பட்ட நபர் தடுமாறி கரடுமுரடான தரையில் கீழே விழுந்து ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். கண்ணில் வலி இருப்பதாக கூறுவது பாவனையாக இருக்கலாம் என்றால் சரிதான்.

ம.வி:

இல்லை.